# யூன்– 28 – வியாழன்

**புனித இரமோயுஸ்**

**“என்னை நோக்கி ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை” (மத்.7:21)**

## முதல் வாசகம் : 2 அரசர் 24 : 8 – 17

அக்காலத்தில் யோயாக்கின் அரசனான போது அவனுக்கு வயது பதினெட்டு. எருசலேமில் மூன்று மாதமே அவன் அரசாண்டான். எருசலேமைச் சார்ந்த எல்நாத்தானின் மகள் நெகுஸ்தா என்பவளே அவனுடைய தாய்.யோயாக்கின் தன் தந்தை செய்த அனைத்தின்படியே ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்தான்.அக்காலத்தில் பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசரின் படைவீரர் எருசலேமின் மீது படையெடுத்து வந்து நகரை முற்றுகையிட்டனர்.அப்பொழுது பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசரும் வந்து நகரை முற்றுகையிட்டிருந்த வீரர்களோடு சேர்ந்து கொண்டான்.எனவே யூதாவின் அரசன் யோயாக்கினும் அவன் தாயும் அவன் அலுவலர்களும் தலைவர்களும் அதிகாரிகளும் பாபிலோன் மன்னனிடம் சரணடைந்தனர். அவனைப் பாபிலோன் மன்னன் தான் ஆட்சியேற்ற எட்டாம் ஆண்டில் சிறைப்படுத்தினான்.பின்பு அவன் ஆண்டவரின் இல்லத்திலும் அரண்மனையிலும் இருந்த செல்வங்களை எல்லாம் எடுத்துக் சென்றான். ஆண்டவர் உரைத்த வாக்கின்படி, ஆண்டவரின் இல்லத்தில் இஸ்ரயேலின் அரசர் சாலமோன் செய்து வைத்திருந்த எல்லாப் பொன்கலன்களையும் துண்டுதுண்டாக்கினான்.மேலும் அவன் எருசலேம் முழுவதையும், தலைவர்கள் அனைவரையும், ஆற்றல் வாய்ந்த பதினாயிரம் படைவீரர்களையும் சிற்பக் கலைஞர்களையும், கொல்லர்களையும் நாடு கடத்தினான். நாட்டில் ஏழை மக்களைத் தவிர எவரையும் விட்டுவைக்கவில்லை.மேலும் அவன் யோயாக்கினையும், அரசனின் தாயையும், மனைவியரையும், அவனுடைய அதிகாரிகளையும், நாட்டின் தலைவர்களையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு நாடுகடத்தினான்.மேலும் வலிமை வாய்ந்த ஏழாயிரம் பேர்களைக்கொண்ட முழுப்படை யையும் போர்த்திறனும் உடல் ஆற்றலும் கொண்ட ஆயிரம் தச்சர்களையும், கொத்தர்களையும் அவன் சிறைப்படுத்திப் பாபிலோனுக்குக் கொண்டு சென்றான்.யோயாக்கினுக்குப் பதிலாக அவனுடைய சிறிய தந்தை மத்தனியாவை அரசனாக்கி, அவனது பெயரைச் ”செதேக்கியா” என்று மாற்றினான்.

**பதில்பாடல் :** உம் பெயரின் மாட்சியை முன்னிட்டு எங்களை விடுவியும் ஆண்டவரே

## நற்செய்தி : மத்தேயு 7 : 21 – 29

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: என்னை நோக்கி, “ஆண்டவரே, ஆண்டவரே“ எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்.அந்நாளில் பலர் என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே, உம்பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம்பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம்பெயரால் வல்லசெயல்கள் பல செய்யவில்லையா?” என்பர்.அதற்கு நான் அவர்களிடம், ”உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்” என வெளிப்படையாக அறிவிப்பேன். ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்.மழை பெய்தது் ஆறு பெருக்கெடுத்து ஓடியது் பெருங்காற்று வீசியது் அவை அவ்வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில் பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது.நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக்கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தம் வீட்டைக்கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார்.மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங் காற்று வீசியது. அவை அவ்வீட்டைத் தாக்க, அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது.”இயேசு இவ்வாறு உரையாற்றி முடித்தபோது அவரது போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர்.ஏனெனில் அவர்கள்தம் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்கு அவர் கற்பித்தார்

**தியானம் :** இறைவார்த்தையை கேட்பவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். (யாக்.1:22) இறைவார்த்தை எத்துணை முதன்மை கொண்டது என்பதற்கு இன்றைய உவமை ஒரு உதாரணம். இறைவார்த்தை அக்காலத்தில் பலவாறு போதிக்கப்பட்டன. அதைப் போதிப்பதற்கென்றே பலவாறு மனிதர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். காலப்போக்கில் போதகனுக்கும் போதனைக்கும் தொடர்பின்றி போனது, காரணம் அது அவர்களது வாழ்வை தொடாத ஒன்றாகிப் போனதே. எனவேதான் இறைவார்த்தையைக் கேட்டு அதன் படிநடப்பவன், நடவாதவன் என இரு பிரிவாக வேறுபடுத்துகிறார். இறைவார்த்தையை கேட்பதென்பது ஒருநிகழ்வாக மாறிப்போனது. ஆனால் அதன்படி நடப்பது என்பது அதுவே வாழ்வாக மாறுவது. இறைவார்தையை செயலில் காட்டுகிறவர்களை பாறைமீது வீட்டைக் கட்டிய அறிவாளியென இன்றைய நற்செய்தி வர்ணிக்கின்றது. அவர்கள் நெருக்கடி நேரத்திலும் உறுதியோடு நிற்பார்கள். ஆனால் இறைவார்த்தையின்படி நடவாதவன் நம்பிக்கையில் வேரூன்றாதவன் அவனை இவ்வுலகசக்திகள் அசைத்து விடமுடியும். வேரற்றமரம் போன்றவன் அவன் என அவனது நிலையற்றதன்மை நற்செய்தியில் சொல்லப்படுகிறது. நாமும் தவறாதுதிருப்பலிக்குச் செல்கிறோம், இறைவார்த்தையை வாசிக்கிறோம், கேட்கிறோம் ஆனால் அதன்படி வாழமுயற்சிக்கிறோமா? சிந்திப்போம்.